# ஈஷா யோக மையத்துக்கு பாபா ராம்தேவ் வருகை

கோவை, டிச.30: கோவை ஈஷா யோக மையத்துக்கு திவ்ய யோக மந்தர் அமைப்பின் நிறுவனரும், உலகம் முழுவதும் யோகா கலையை பிரபலப்படுத்தி வருபவருமான பாபா ராம்தேவ் செவ்வாய்க்கிழமை வருகை தந்தார்.

முரசுகள் முழங்க, சமஸ்கிருத உச்சாடணங்களுடன் பாரம்பரிய யோக முறைப்படி அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, அவரது சத்சங்கம் நிகழ்ச்சி நடந்தது. இதில், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்றனர். இந் நிகழ்ச்சிக்கு சத்குரு தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் பாபா ராம்தேவ் பேசுகையில், 'சிவனின் இருப்பிடமான இமய மலையில் இருந்து வருகிறேன். வெள்ளியங்கிரி மலைச் சாரலில் இருக்கும்போது இன்னொரு இமய மலைக்கு வந்ததாக உணர்கிறேன்' என்றார்.

பிரதிஷ்டை செய்யப்பட்ட ரசலிங்கத்துடன் கூடிய தீர்க்கத் குளத்தில் மூழ்கிய பிறகு தியான லிங்கத்தை அவர் தரிசனம் செய்தார்.